தத்துவபோதினி.

பு. உ.] சென்னைப்பட்டணம் கஅசுசுஸ்ரீ பிப்பரவரிமீ எஉ. [இல. க௦.

ஏகமேவாத்விதீயம், ஸத்யம் ஜ்ஞானமனந்தம் ப்ரஹ்ம, ஶாந்தம் ஶிவமத்வைதம், யதோ வா இமானி பூதானி ஜாயந்தே, யேன ஜாதானி ஜீவந்தி, யத்ப்ரயந்த்யபிஸம்விஶந்தி.

ஸத்யமேவ ஜயதே நாந்ருதம்.

அட்டவணை.

விஷயங்கள்.

	பக்கம்.		பக்கம்.
க. கடவுள்துதி	உ0கூ	ரு. பகவத்கீதை	உகரு
உ. விளம்பரங்கள்	உக0	சு. மநுநூல்	உகஎ
ங. தததுவபோதினி	உகக	எ. நிருபங்கள்	உகஅ
ச. ருக்குவேதசம்ஹிதை	உகங		

சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

கடவுள்துதி.

ஆசிரியவிருத்தம்.

அலகிலாவகிலாண்ட முழுமையுஞ்சிருஷ்டிசெய்
தன்பினொடுகாக்குமாதி
அத்துவிதவஸ்துவா யாநந்தமயமாகி
யருள்பழுத்தொழுகுதருவே
பலவாறுபேசுபல வாகமக்கொள்கையும்
பழுதுற்றசமயநெறியும்

பற்றுமலையநின் பாதாரவிந்தங்கள்
பற்றுநெறிகற்பிவிப்பாய்
நிலையற்றகாயத்திற் குடிகொண்டவென்னையும்
நின்னரும்புதல்வனென்றாய்
நின்கருணைபெற்றுநான் நின்பெருந்தன்மையில்
நிற்கவரமருள்வதரிதோ
நிலமீதுநானுனது நித்தபரிசுத்தமுடன்
நிலையுற்றபூததயையும்
நிறைவாகப்பெற்றென்று நின்னுடன்வாழ்வனோ
நிஷ்களங்கப்பிதாவே!

விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் காரியதர்சியாகிய பா. சுப்பராயலு செட்டியார், பி. ஏ. பி. எல். அவர்களுக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்தி லுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.....................க - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். உ - 0 - 0

பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்...... ....க - கஉ - 0

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத் தொடங்குவோர் வருஷத்திய சந்தாவும் கொடுக்கவேண்டும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனால், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதற்க்காக,ரூபாய் ஒன்றுக்கு- ஒரு அணா வீதம் வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாறும்போது அந்தவிவரத்தைத் தயைசெய்து காரியதர்சிக்குத் தெரிவிக்கவேண்டியது.

புஸ்தகவிளம்பரம்.

கிரந்தத்திலும், தமிழிலும் இயற்றப்பட்டபாலவியாகரணம். 0 - ௮ - 0

வேதஸமாஜத்தார் முதல் விண்ணப்பம் விக்கிரஹ ஆராதன

த்னைதக்குறித்தது நன்ருய் ப
யிண்டுசெய்தது,............0 - அ - 0
ஷை மட்டபயிண்டுள்ளது.......0 - எ - 0
கஅகூசஹூ மேமாசம் முதல்
கஅகூடுஹூ ஏப்பிரல்மீ வ
ரையிலுள்ள தத்துவபோதி
னி பயிண்டுசெய்தது...... ௬ - 0 - 0
தமிழில்ஸ்தோத்திரபாடம்பிரதி 0 - க - 0
வெளியிலுள்ளவர்கள் புஸ்தகம் ஒன்றுக்
கு ஒருஅணுவீதம் தபால்கூலி சேர்த்
தனுப்பவேண்டியது.

நிருபக்காரருக்கு விளம்பரம்.

இந்தப்பத்திரிகையில் பிரசுரமாகும்படி தயைசெய்து நிருபமெழுதியனுப்பும் கனவான்கள், அதுபிரசுரமாக வேண்டியதற்கு முன்மாதமே, உ0வ க்குள்ளாக அந்த நிருபங்கள் எங்களிடம் சேரும்படி அனுப்புவார்களாகில் வெகு உபகாரமாகவிருக்கும்.

எங்கள்கொள்கைகளை ஆக்ஷேபித்தெழுதினுல் நாங்கள் பிரசுரம்செய்யமாட்டோமென்கிற கருத்தினுலே நிருபமெழுதமனமுடைய பலர் எழுதாமலிருப்பதாய் நாங்கள் கேள்விப்படுகிறேம். உண்மை வெளியாகவேண்டியதே எங்கள்கருத்தாகையால், எங்கள் கக்ஷிகளை யாக்ஷேபித்தெழுதப்படும் நிருபங்களை நாங்களிதில் பிரசுரஞ்செய்வது மாத்திரமேயன்றி, பழுதானவையாய்த் தோன்றும் ஆக்ஷேபங்களுக்கு எங்களாலியந்தவரையில் சமாதானம் சொல்லவும் சரியான ஆக்ஷேபங்களை ஒத்துக்கொள்ளவும் சித்தமாயிருக்கிறேம்.

விஷயங்களின் மேலுள்ள குணதோஷங்களை யெவ்வளவெடுத்துச் சொன்னுலும் எங்களுக்குச் சம்மதமேயாகிலும், வியக்தி தூஷணங்களடங்கிய நிருபங்களை இதில் பிரசுரப்படுத்த இயலாதாகையால் அதற்காக மன்னிக்கக்கோருகிறேம்.

கடைசியாக உண்மைவெளியாகி நன்மைபரவவேண்டுமென நாங்கள்முயலுகிறவாறே நிருபக்காரரும் பரிசுத்த சிந்தையுடன் தங்கள் கருத்துகளை வெளியிடுவார்களென்று நம்புகிறேம்.

தத்துவபோதினி.

சோதரர்களே, கடந்த பத்திரிகையில் தத்துவபாமி யென்பவருடைய நிருபத்திலடங்கிய முதல்வினுவுக்கு விடையுரைத்தோமல்லவா ? இன்று இரண்டாம் வினுவை யோசிப்போம்.

இரண்டாவதுவினுஎன்னவெனில் "வி"ஷ்ணுவானவர் தசாவதாரமெடுத்ததாய்"ச்சொல்வது மெய்யோ பொய்யோ? "மெய்யென்பதற்கு நிதர்சனமாகஅனே"க சாஸ்திரங்களிருக்கப், பொய்யென்ப"தற்குக் காரணமென்னவோ ? பகவத்கீ"தை கிருஷ்ணன் அர்ஜுனனுக்குத் தி"ருவுளம்பற்றியதென்று சமாஜத்தார் ஒ"ப்புக் கொண்டிருந்தபக்ஷத்தில் சகலமு"ம் தானென்று தோற்றுவிக்கிற கிருஷ்"ணன் பரப்பிரம்மமாகிருனல்லவா ? கி"ருஷ்ணன் யார், அவதாரமன்ருே ? அ"ன்றேலிதுவிஷயத்தில் சற்று ஆழ்ந்தவி"சாரந்தேவை" என்பதேயாம். விஷ்ணு தசாவதார மெடுத்ததாய்ச் சொல்வது கல்பனையேயன்றி உண்மையல்ல, இதற்கு ஆதாரமாய் அனேக "சாஸ்திரங்களி"ருப்பதாய் நமதன்ப ருரைத்தபோதிலும், அவர் உண்மையைப் பரிசோதிக்கத்தொடங்குங்கால் சிலபுராணங்களும்இதிஹாஸங்களும் தவிரவேறென்றிலும் இதற்கு ஆதாரம் கிடையாதென்று வெளியாகும், புராணங்களும் சாஸ்திரமாகுமோ? அவற்றின் சுவரூபத்தை விசாரிக்குங்கால் அவற்றிற் பெரும்பாலும் கட்டுக்கதை

யென்று வெளியாகும், ஆசாரவிஷயங்க
ளில் ஸ்மிருதியும், தத்துவ விஷயங்களி
ல் புராணங்களும் சாதனமென்று நம்மவ
ர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்களல்ல
வா? அன்றியும் வேதசாஸ்திரங்களை யதி
கரிக்கச் சக்தியில்லாதவர்களுக் கென்றே
புராணங்களேற்பட்டனவல்லவா? கேவ
லம் பொதுநீதிகளைத் தொகுத்துத் திர
ட்டியுரைத்தால் சாதாரணஜனங்க ளுடை
ய மனதிற் பொருந்த மாட்டாதாகையா
ல், சிலகதைகளைக் கல்பித்துச் சொல்லி,
அவற்றினின்றும் நீதியைச்சங்கிரகிக்கும்
படி புராணக்கார ரமைத்திருக்கின்றனர்.
இவ்வாறெழுதுவது நம்மவர் மாத்திரமல்
ல. மற்றநாடுகளிலும் இதுவுண்டு. ஒரு
வனெவ்வளவு துர்த்தசை யிலிருந்தபோ
திலும் பிராணனை விடுவதைக்காட்டிலும்
துன்பத்தைப் பொறுப்பது மனிதனியல்
பு என்பதை மனதிற் பொருத்தும் பொ
ருட்டு, "ஒருவிறகு தலையன்தினந்தோறு
"ம் விறகு வெட்டி விற்றேஜீவனம் செ
"ய்யும்படி யிருந்தபோது, ஒருநாள் அ
"வன் தன்ஜீவனத்தின் கொடுமையைப்
"பொறுத்து முடியாமல் என்னை எமன்
"கொண்டுபோகானா,வென்றுமுறையிட்
"டுத்தன்தலைமீதிலிருந்த விறகைத்தரை
"யிலெறிந்ததாயும்;ஆகிலும்உடனே யம
"ன் பிரத்தியக்ஷமாகியென்னையேனழை
"த்தாயென்றுகேட்கவே.அந்தவிறகுத்த
"லையன் நடுநடுங்கி, யமனைநோக்கித் த
"ரையில் விழுந்த சுமையைத் தலைமீதே
"ற்றும் பொருட்டுத்தானழைத்தேனெ
"ன்று விடையுரைத்ததாயும்" இங்கிலீ
ஷார் ஒருகதையைக் கல்பித்திருக்கிறார்க
ளல்லவா? இவற்றில் ஒன்றைச் சாதார
ண கல்பனையாய்க் கிரகிக்கும்நாம்மற்றொ
ன்றை வேறுவிதமாய்க் கொள்வதற்குக்
காரண மென்னவாம்? பருந்தும், குரங்
கும் சல்லாபம் செய்யக்கண்டதா யிப்
போதொருவனுரைத்தால்நம்புவோமோ?
நம்பமாட்டோமெனில், இதே விஷயத்
தைப் புராணாதிகளிற் காணும்போது மா
த்திரம் நம்புவதற்கு ஹேதுவென்ன? வி
ஷ்ணு பத்தவதார மெடுத்ததாய் ஒருபு
ராணத்தாலும், இருபத் திரண்ட வதார
மெடுத்ததாய் மற்றொன்றாலும், இருபத்
தைந்தவதார மெடுத்ததாய் இன்னொன்
றாலும், "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்" எ
ன்றுஉலகத்திலுள்ள சகல சராசரங்களு
மவதாரமாயேற்படுமாகில் அவற்றில்எல்
லாவற்றையும் உண்மையாகவேகொள்ள
வேண்டியதோ; அல்லது எதை நம்பவே
ண்டியது. பிரும்மா, வராகன்,நாரதன்,நர
ன்,நாராயணன்,கபிலன்,ஆத்திரேயன்,யக்
கியன், ருஷபம், பிரது, மீன், ஆமை,தன்
வந்திரி, நரசிம்மன், வாமனன், பரசுராம
ன், வியாசர், ராமன், பலராமன், கிருஷ்
ணன், புத்தன், கல்கி, ஆகிய இருபத்திர
ண்டவதாரங்கள்விஷ்ணுவெடுத்ததாய்பா
கவதம் முதல்ஸ்கந்தம் மூன்றாவதத்தியா
யத்தால் விளங்கும். இந்த அவதாரங்க
ளில் நிரீசுவர மதப்பிரவசனம் செய்த க
பிலனும் ஒருவனாயிருப்பது புதுமை யா
கவிருக்கின்றது. இதினாலெல்லாம் பூர்வ
த்தில் சாதாரண ஜனங்களைக் காட்டிலும்
கொஞ்ச விசேஷ சக்தியிருந்தவரெல்லா
ம் பகவதம்ச மென்று பாமரர் கெண்டா
ர்களென்றும்; இவ்விதக் கொள்கை பழ
குந்தோறும் பண்டிதரும் அதையங்கீகரி
த்தார்களென்றும் ஏற்படுகிறதல்லவா? இ
தற்கு நிதர்சனமாக "நாவிஷ்ணு: ப்ருதி
வீபதி:" (விஷ்ணுவாயிருந்தாலன்றி ஒ
ருவன் அரசனாயிருக்கமாட்டான்)என்னு
ம் பிரமாணவாக்கியத்தைக் கவனிப்போ
மாகில், குயின் விக்டோரியா, நவாபுவா
லாஜா, ஹைதர், டிப்பு,முதலியவர்களெ
ல்லாம் விஷ்ணுவின் அவதார மென்றே
கொள்ள வேண்டியதாகிறது. இவ்வள
வேயன்று,நம்முடையஆசாரியர்களில் வி
க்கிரகமாய் வார்க்கப் பெற்றவர்க ளெல்
லாம் அவரவர்காலத்தில் சரதாரணமனி
தராய் விளங்கினபோதிலும், இக்காலத்
திலுள்ளவர்கள் விஷ்ணுவின் பரிஜனங்க
ளே யவ்வாறு அவதரித்ததாய் கொள்ளு
கின்றனரென்பதற்கு, ராமானுஜாசாரியர்
வேதாந்தாசாரியர், முதலிய வர்களுடை
ய ஐதிகங்களே நிதர்சனமா யிருக்கிறது.
இந்த பரிஜனங்கள் ஜீவாத்மாக்களாயாவ
து அல்லது பரமாத்மாக்களாயாவது இ
ருக்கவேண்டுமேயன்றி,வேறுவழியில்லை.

பிரபஞ்சத்தில் ஒருபரமாத் மாவுக்குமே விருப்பதாய்ஒருவருடையகொள்கையுமில்லையாகையால்,இவர்கள் பரமாத்மாக் களல்லவென்று ஏற்படுகிறது. பரமாத்மாக்களல்லாதவரையில்அவர்கள் ஜீவாத்மாக்களாகவே யிருக்க வேண்டுமல்லவா. ஜீவாத்மாக்களாகில்அவர்கள் பத்தராயாவதுமுக்த்தராயாவதுஇருக்கவேண்டுமேயன்றிமூன்றாம்வழியில்லை.முக்தராகில்மோக்ஷத்தினின்றும் மீள அவர்களுக்குச் சக்தியில்லையென்பதற்கு "ந ச புநராவர்த்ததே"என்கிறசுருதிவாக்கியத்தைக் கவனிக்கவேண்டியது; பத்தர்களாகில்அவர்களுக்கு மோக்ஷத்துக்குள் செல்ல சக்தியில்லையாகையால்,பரிஜனங்களாயாவதுநித்தியசூரிகளாயாவது இருப்பதுசாத்தியமல்ல,ஆகையால் இவர்களெல்லாம்மனிதரேயன்றி வேறல்லரென்றேற்படுகிறது. இதினாலெல்லாம்அவதாரங்களில்பெரும்பாலும் அடியோடு கல்பனையென்றே ஏற்படுகிறதல்லவா. இவற்றில் மத்ஸியகூர்மாதி அவதாரங்கள் அடியோடுகல்பனையாகிலும் ராமகிருஷ்ணாத்தியவதாரங்கள் முற்றும் அத்தன்மையானவல்ல. கவிகள் அடியோடு கதைகளைக்கல்பித்துக்கட்டுவதுமுண்டு, அல்லது பிரசித்தமானபுருஷர்களில், சிலருடைய ஐதிகங்களை அடிவாரமாய் வைத்துக்கொண்டு பிறகு ஆவசியகமானவரைக் கல்பித்துக்கட்டுவது முண்டு. ராமகிருஷ்ணாத்தியவதாரங்களிவ்விரண்டாம்வகுப்பைச் சேர்ந்தனவாம்; என்றால் அத்தன்மையான புருஷர் ஜகத்தில் ஜனித்ததும்,அவர்களிடத்திலாரோபிக்கப்பட்ட செயல்களில் சிறிதையவர்கள் செய்ததும் உண்மையேயாகிலும், அவர்கள் தேவதாம்சமென்பதும், அதற்கிணங்கச் சொல்லப்படும் கதைகளும் கல்பனையென்றே கொள்ளவேண்டியது. முற்றும் கல்பனையான கதைகளையுடையனபுராணங்களென்றும், மனிதருடைய ஐதிஹத்தை அடியாகக்கொண்டு கல்பிக்கப்பட்டவை இதிஹாஸங்களென்றும், இக்கதைகளிரண்டுவகையாய்ப் பிரிந்திருக்கின்றன. காக்கைக்கும் கழுதைக்கும் நடந்தசம்வாதமென்னும் ஒருகதையைப்படித்தவர், அந்தஸம்வாதம்உண்மையாய்நடந்ததாய்க் கொள்வார்களோ, அல்லது அவ்வாறு கவிகல்பித்திருப்பதாய்க் கொள்வார்களோ ? இவ்வாறே அர்ஜுனனைநோக்கி கிருஷ்ணன் கீதையை உபதேசித்ததாய் கிரந்தகர்த்தா கல்பித்துச் சொல்வதை மாத்திரம் வேறுவிதமாய்க் கொள்வதற்குக் காரணமென்ன? இவ்வாறு அடியோடில்லாததை உண்டென்றுகல்பிப்பார்களாவென சங்கிக்கவேண்டாம். சற்று கவனமாய்ப் புராணங்களைப்படிப்பவருக்கு, விஷ்ணுவின் மஹிமையை ஸ்தாபிக்க விரும்பும் வைஷ்ணவர் பார்வதியை நோக்கி சிவனின்னின்னவண்ண முரைத்தாரென்றும், சிவனுடைய மாஹாத்மியத்தை நிலைநிறுத்தக் கோரும்சைவர் லக்ஷ்மியை நோக்கி விஷ்ணு இன்னின்னவிதமாயுரைத்தாரென்றும், பிரதிவாதிவாயைக்கொண்டு ஸ்தாபிக்கமுயன்றுகல்பித்தெழுதுவது தினந்தோறும் நடந்துவரும் சம்பிரதாயமென்று விளங்கும்.

மற்றொருவினவுக்கு விடையுரைக்கஇன்று அவகாசமில்லையாகையால் வருகிற பத்திரிகையில் தொடர்ந்து விசாரிப்போம்.

ருக்குவேதசம்ஹிதை.

(தொடர்ச்சி.)

சூக்தம், ச. (யரு.)

ருஷியும் பாவும் முன்போல. இந்தசூக்தம்முழுதும்இருதுதேவதைக்குரியதே: ஆயினும் ஒவ்வொரு ருக்கிலும் இந்திரன் முதலாகிய வேறுதேவதைகளும் கலந்திருக்கின்றன.]

வர்க்கம்-உஅ.

க. இந்த்ர ஸோமம் பிப ருதுநா த்வா விசந்த்விந்தவ꞉, மத்ஸராஸஸ்ததோகஸ꞉.

இந்திரனே, ருதுவுடன்கூட ஸோமத்தைக்குடியும். ஸோமங்கள், திருப்திகரமானவைகளாகவும், அதேநிலையானவை

களாகவும் * உமக்குள் பிரவேசிக்கக்கடவது.

உ. ஊ-ஷுதஃவிவதகூ-தா நா வொத்ராஷ்ஜ்ரும்வ-நீதந, யூஷூயம்ஹி ஷ்டாஸ-ஷாநவஃ.

ஓமருத்துகளே, இருதுக்களோடு, போதா † வினுடைய பாத்திரத்தினின்று குடியுங்கள். (அதனல் எங்களுடைய) யக்கியத்தைப்பவித்திரமாக்குங்கள்; ஏனெனில் நீங்கள் நற்கொடையினர் களாயிருக்கிறீர்கள். ‡

௩. அஹியஜ்ஞும் ஶ்ரூணிஹி நொஶா வொநெஷ்டஃவிவகூ-தா-நா, கூவம்ஹி ரத்நயாஅஸி.

மணிவிசகிதமாயிருக்கிறநேஷ்டாவே ¶ (தேவர்களுக்குச்) சமீபம் எங்களுடைய யக்கியத்தைப்புகழும்; ருதுஉடன் கூடகுடியும்; ஏனெனில் நீர் ரத்தனங்கொடுப்பவராயிருக்கிறீர். §

௪. அஹெஂ தெவா ஊஹாவஹவாஷ யாயொநிஷ-த்ரிஷு, வரிஷு-ஷ விவகூ-தா-நா.

அக்கினியே, தேவர்களை இங்கேகொண்டுவந்து மூவிடங்களில் * உட்கார்த்தி (அவர்களை) அலங்கரியும் (மேலும்) ருதுவுடன்கூட குடியும்.

௫. ஶ்ராஹ்மணாஉஜ்ராயஸஃ வி வொஸஊ-த-ஷுதீரநு, தவெஸிஸவ்யஃ ஸூதம்.

இந்திரனே, பிராம்மணனுடைய, விலைபெற்ற † பாத்திரத்தினின்று, ருதுக்களின் பின்னேடு ஸோமத்தைக்குடியும், ஏனெனில் (அவர்களுடன்) உம்முடையசிநேகம் அழியாததே.

௬. ய-வம்ஷக்ஷம்யூதவூதஶீத்ரா வரிணஷ-ஷஹம், கூ-த-நாயஜ்ராஶா யெ.

விரதங்களைப்பற்றி யவர்களாகிய, மித்திராவருணர்களே, நீங்களிருவரும், ருது உடன்கூட, வளர்ந்ததும்(சத்துருக்களா ‡ ல்) கெடுக்கக்கூடாததுமாகிய (நம்முடைய) யக்கியத்தை அடைகிறீர்கள்.

வர்க்க, ௨௬.

௭. ஷ்ரவிணொஷாஷ்ரவிணஸொஶ்ரா வஹஸ்தாஸொஅஶ்வரெ, யஜ்ஞெஷு-தெஷ வஊஷதெ.

அத்வரத்தினிடத்தும் யக்கியங்களினிடத்தும் * பொருள்விரும்புவோரும், (அபிஷவத்தின் பொருட்டுக்) கையில்கல்லெடுத்தவர்களும் (ஆகிய ருத்துவிக்குகள்) பொருள்கொடுப்பவராகிய (அக்கினிக்)கடவுளைப்புகழ்கிறார்கள்.

௮. ஷ்ரவிணொஷாஷஷா-த-நொவ ஸஹ-நியாநிஶ்ரூண்விரெ, தெவெஷு-தாவநாஶஹெ.

* உம்முடைய வயிற்றிலேயே எப்போதும் நிலையாயிருக்கின்றவைகளாய்.

† ருத்துவிக்குகளில் ஒருவன்.

‡ யூஷூயம்ஹிஷ்டாஸ-ஷாநவஃ இதற்கு, மேலேகூறியிருப்பதே சகஜமான பொருளாகத்தோற்றுகிறது. ஆகிலும் பாஷியத்தில் இந்தஅருத்தம் சரியல்லவென்று விலக்கி "நற்கொடையினர்களாகிய நீர் (பவித்திரமாக்குதலில் பிரசித்தராய்) இருக்கிறீர்" என்று பொருள் செய்யப்பட்டிருக்கிறது.

¶ "நேஷ்டா" என்பது துவஷ்டாவைக்குறிக்கிறது (௧௫)ம் சூ-௧௦ பார்க்க.

§ ஆதலால் குடிக்கத்தகுந்தவர்எனக்கருத்து.

* "மூன்று ஸவனங்களிலும்" எனவுரை.

† ஶ்ராயஸஃ—திரவிதத்தாலாகிய.

‡ ஷஷஹம்— ஷ-ஷஹம் எதிர்த்தற்கரிய,

* அத்வாப் என்பது பிரகிருதிரூபமான அக்கினிஷ்டோமத்தைக்குறிக்கிறதென்றும், யக்கியமென்பது விகிருதிரூபமான உக்தியம்முதலியகிரியைகளைக்குறிக்கிறதென்றும்உரையினுல் விளங்குகிறது.

பொருளைக் கொடுப்போனானவன், எவைகள் கேள்விப்படப் படுகின்றனவோ † அந்தப்பொருட்களை,எங்களுக்குக்கொடுப்பாராக அவைகளைத்தேவர்களின்பொருட்டு நாடுகிறோம்.

௯. ருவிணோஷாஃ விஶேஷதிஜ ஹொதவ்ய வதிஷ்ட,நேஷ்டாத்ருத ஹீஷிஷ்யதஃ.

பொருள்கொடுப்போன், இருதுக்களின் கூடநேஷ்டா ‡ வின்பாத்திரத்தினின்று, குடிக்கவிரும்புகிறார். (ஆகையால்ருத்துவிக்குகளே) போய் ஹோமம்செய்து, (பின்பு ஹோமஸ்தானத்தைவிட்டு வேறிடத்துக்குப்) போங்கள்.

௰. யக்ஷதஹீய ரூதஹீருவிணோஷொயஜாஃஹெ, ஊயஸாநொஊஜீ ஹுவ.

பொருள்கொடுப்பவரே, உம்மை ருதுக்களுடன் நான்காந்தடவையஜிக்கிறோமாகையால் (இப்போது) எங்களுக்கு(நீர்)அவசியமாய் கொடுப்பவராகிவிடும்.

௧௧. • ஊஶ்விநாவிஃவதம் ஃயஹீஊஷ்ருதி ஶஹீவ்ரதா, ஊதநாயஜு வாஹஸா

பிரகாசமான, (ஆஹவனீயம்முதலிய) அக்கினிகள் பொருந்தியவர்களும், பரிசுத்தமான செய்கைகளை யுடையவர்களும், இருதுவுடன் யக்கியத்தை வஹிக்கின்றவர்களுமாகிய அசுவின்களே, மதுவை ⁂ க் குடியுங்கள்.

௧௨. மாஹஹுவதெ்ரநஸம்த்ருஊதநாயஜு நீரவஷி, தெவாநெ வயதெ யஜ

---

† "அவிசுக் குபயோகமென்று கேள்வி" என வுரையில் விரித்துச்சொல்லப்பட்டிருக்கிறது.

‡ முன் உ-ம் ருக்கில்போதாவென்றுசொல்லிய ருத்துவிக்கேயாம்.

⁂ மதுபானஸோமம்,

(பயன்) கொடுக்கிறவரே, (நீர்) கிருசபதி † ரூபத்தையுடையவராய், இருதுவுடன்கூட யக்கியத்தை நடத்துகிறவராயிருக்கிறீர் (ஆகையால்) தேவர்களை விரும்பும் (யஜமானனின்பொருட்டு) தேவர்களை யஜியும்.

பகவத்கீதை.

௧௫-வது அத்தியாயம்.

கிருஷ்ணன்சொல்.

௧. பிரம்மத்தை மூலமாகவும், அதினின்றும் வேறுபட்ட மகதாதிதத்துவங்களைச்சாகைகளாகவும் உடைய இப்பிரபஞ்சமாகிய அரசமரத்தை நித்தியமென்று சொல்வார்கள். (இதுவேர் மேலும் கிளைகள் கீழுமாகவுடைய அசுவத்தவிருக்ஷமெனவும் சொல்லப்படும்.) இந்தவிருக்ஷத்திற்கு வேதங்கள் இலைகள், இதையறிந்தவன் வேதவித்தாகிறான் (பிரம்மமறிந்தவன்). (இதனில் ஈசுவரனை மூலகாரணமாகக் கொண்டு ஜனித்திராநின்ற பிரபஞ்சமானது நித்தியமான அரசமரமாக வுத்பிரேக்ஷிக்கப்பட்டது.)

௨. இந்தவிருக்ஷத்தின் சாகைகளாகியதத்துவங்கள் திருகுணப்பிரேரேபிரமானசப்தாதி விஷயங்களாகிய துளிர்களோடுங் கூடி கீழும் மேலும் பரவியிருக்கின்றன. அதன்அதோமுகமாகிய வேர்கள்தான் மனுஷியலோகத்தில்கர்மபந்தங்களாயிருப்பவை, (இதில், சப்தாதிவிஷயங்களை இந்தவிருக்ஷத்துக்குத் துளிர்களாக சொன்னதுமன்றி, இந்தவிருக்ஷத்துக்கு அதோமுகமாசவியாபித்திருக்கும் வேர்களுமுண்டென்றும், இவைகளே கர்மபந்தங்களென்றும் சொல்லப் பட்டிருக்கின்றன.)

௩. இவ்விடத்தில் இதனுடைய ஸ்வரூபத்தை (உள்ளபடி) அறியமாட்டார்கள். அவ்வாறே இதின் ஆதியையும் அறியமாட்டார்கள். அதிபலமான வேர்களையுடைய இந்தவிருக்ஷத்தை விரக்தியென்னு மாயுதத்தைக் கொண்டு சேதித்து,

௪. அதன்பிறகு எதையடைந்து மீண்டுந் திரும்புவதில்லையோ, எவனால் அனாதியான இப்பிரபஞ்சவிருக்ஷம் பிரவிர்த்திக்கப்பட்டதோ, மூலகாரணமாகிய அப்பரமாத்மா

---

† இயல்பில்—வீட்டின்யஜமானன்,

வை சரணடைகின்றேனென அப்பரமபதத்தைத் தேடத்தக்கது. (என்றால் பிரபஞ்சமாகிய விருக்ஷத்துக்கு வேராயிருந்து ஒவ்வொருகணமும் இடைவிடாது ரக்ஷித்துவரும் பரமாத்மாவாகிய ஒருவனையேசரணடைந்து மற்றெல்லாம் தியஜிக்கத்தக்கது.

௫. மானமோஹங்களற்றவரும், நிவர்த்தியுள்ளவர்களும், பிரம்மவித்தியா சக்தியுள்ளவர்களும், நிஷ்காமிகளும், சுகதுக்கங்களிரண்டையும் விட்டவர்களும் ஆகிய ஞானிகள் நாசரஹிதமான அந்தப்பதத்தை அடைகின்றனர்.

௬. அந்தப்பிரம்மத்தை, சூரியனாவது, சந்திரனாவது, அக்னியாவது பிரகாசிக்கச்செய்ய சக்தியுடையவர்களல்லர். எதையடைந்து மீண்டும்திரும்புவதில்லையோ அதுவேயென்பரமபதம்.

௭. அநாதியாகிய என்னுடைய அம்சமே ஜீவலோகமாகிய இவ்விடத்து, ஜீவஸ்வரூபமாய் மனதோடுங்கூடிய இந்திரியங்களை ஆகர்ஷிக்கின்றது. (என்றால், அப்பரமாத்மாவின் அம்சமாய் அவனருளால் ஜனிக்கும்ஜீவன் பிரகிருதியை யடைந்து மனதோடும் இந்திரியங்களோடும் சம்பந்தித்து வியவஹரிக்கின்றது. இதினால் பிதாவுக்கும் புத்திரனுக்கும் எவ்வாறு பிறப்பினால் ரக்தசம்பந்தமுண்டாயிருக்கின்றதோ அவ்வாறே சகலபிராணிகளுக்கும் பிதாவாகிய பரமாத்மாவுக்கும், ஜீவகோடிகளுக்கும் ஆத்மஸ்வரூபமாகிய சித்சரீர சம்பந்தமுண்டென்பதுவிளங்கும்.)

௮. ஈஸ்வராம்சமாகிய (என்றால் ஈஸ்வரசம்பந்தத்தால் ஜனிக்கும்)ஜீவன் எந்தச்சரீரத்தை யடைந்தாலும், எந்தசரீரத்தை விட்டாலும், புஷ்பங்களினின்றும் கந்தத்தை வாயு கிரஹிப்பதுபோல், இந்த இந்திரியங்களைக் கிரஹித்துக் கொண்டு போகிறது. (என்றால் இந்திரியங்களால் சரீரத்துக்கும் ஜீவனுக்கும் சம்பந்தமுண்டாகிறது.)

௯. இந்தஜீவன் சப்தாதி பஞ்சேந்திரியங்களையும் மனதையும் தன்னதிகாரத்துக்குட்படுத்தி, விஷயங்களையனுபவிக்கின்றது.

௰. மூடர்கள், இதுதேஹத்தைவிடும்போதாவது, அடையும்போதாவது, குணங்களைச்சேர்ந்து அனுபவிக்கும் போதாவது, அறியார்கள். ஆனால் ஞானதிருஷ்டியுள்ளவர்கள் பார்க்கிறார்கள், (என்றால் ஈசுவராம்சமாகிய ஜீவன் அவ்வீசுவரசம்பந்தத்தினாலேயே, அல்லது அவனிடைவிடாது சேர்ந்தியாநின்ற வருளினால், சரீரத்தையடைந்துபிரபஞ்சமாகிய விஷயங்களை அனுபவித்துக்கொண்டிருக்கவும், ஜீவன் இவ்வாறு பரமாத்மாவுக் காதீனமாய் நடிக்கிறான் என்பது அது சரீரத்தையடையும்காலத்திலும், விடுங்காலத்திலும், சரீரத்தோடு கலந்திருக்குங்காலத்திலும், பரிஷ்காரமாய் விளங்குமாயினும் இதைஞானிகள் அறிவார்களேயன்றி மூடர்கள் அறியார்கள்.)

௧௧. (ஆகையால்)யோகிகள் பிரயத்தினப்பட்டு இப்பரமாத்மாவை தம்மிடத்தேஇருப்பதாக பார்க்கின்றார்கள். அஞ்ஞானிகள் பிரயத்தினப்பட்டும் பார்க்கிறதில்லை.

௧௨. எந்ததேஜஸானது சூரியனைச்சேர்ந்து சமஸ்தமானஜகத்தையும் பிரகாசிக்கச்செய்கின்றதோ, எதுசந்திராக்கினிகளில்ஜ்வலிக்கின்றதோ, அவையெல்லாம் என்சம்பந்தமானதென்றே யறியத்தக்கது.

௧௩. நான் பூமியில் பிரவேசித்து பலத்தினால் பிராணிகளை தரிக்கச் செய்கின்றேன் ரஸசுவரூபனாகிய சந்திரனாய் சமஸ்தமான வோஷதிகளையும்போஷிக்கின்றேன்.

௧௪. நான்ஜாடராக்னியாய்பிராணிகளுடைய சரீரத்தையடைந்து பிராணபானாதி வாயுக்களுடன்கூடி யன்னத்தை நான்குவிதமாக பசனம்செய்கின்றேன்.

௧௫. சகலபிராணிகளுடைய ஹிருதயத்தில் பிரவேசித்திருக்கின்றேன். ஆகையால் என்னால் அறிவும், ஸ்மரணையும், இவற்றின்மறைவும் ஆகின்றன. சமஸ்தவேதங்களாலு மறியத்தக்கவனும், வேதங்களை யறிந்தவனும், வேதாந்தத்தைச் செய்தவனும்நானே.

௧௬. லோகத்தில்க்ஷரனென்றும், அக்ஷரனென்றும், இரண்டுபுருஷர்கள். இவர்களுள் க்ஷரனாவது, சர்வபூதங்களென்றும், அக்ஷரன் அந்தராத்மா வென்றும் சொல்லப்படும்.

௧௭. இவையிரண்டிற்கும் அந்நியமான உத்திருஷ்டமான புருஷன் பரமாத்மாவென்று சொல்லப்படுவான். எவன்மூன்றுலோகங்களிலும் பிரவேசிக்கின்றானோ அவனே நாசரகிதமான ஈசுவரன்.

௧௮. எந்தகாரணத்தினால் நான்க்ஷரபுருஷனைக்கடந்தவனும் அக்ஷரபுருஷனைப் பார்க்கிலும் உத்தமனும்ஆகின்றேனோஅக்காரணத்தினாலேயே லோகததிலும்வேதத்திலும் பிரசித்தியான புருஷோத்தமனாகின்றேன்.

ககூ. ஓ அர்ஜுனா! எவன் மோகவர்ஜிதனாய் புருஷோத்தமனாகிய வென்னையறிகின்றானோ அவன்சர்வக்கியனாய் சமஸ்த்தவிதங்களாலென்னைபஜிக்கின்றான்.

உ0. பாபரகிதனான ஓ அர்ஜுனா! மிகவும்ரகசியமான இந்தசாஸ்திரம் என்னால்சொல்லப்பட்டது. இவ்வாறுஇதையறிந்து புத்திமான் கிருதக்கியனாவான்.

மநுநூல்.

உ-வது-அத்தியாயம்.

(இஃது, உ-வது-புத்தகம், கூ-வது-இலக்கத்தின் தொடர்ச்சியாயினும், மேற்கண்ட இலக்கத்தில் கசுக-வது-பக்கத்தில், அகூ-வது-சுலோகந்தொடங்கி, கூகூ-வது வரையில் கைப்பிசகாய், முன்னெழுதியதே பின்னுஞ்சொல்லப் பட்டிருப்பதால், மேற்கண்ட, அகூ-முதல் கூகூ-வரையிலுள்ள கலங்களை நீக்கி, அகூ-வது-சுலோகத்தை,-க00-ஆகவாசித்து,முறையேகடைசியானகலத்தை, கஉஉ-வதாகவைத்துக் கொள்ளவும்.

கஉங. யாராவது சம்ஸ்கிருதபாஷையறியாமையினால் அபிவாதனார்த்தத்தையறியாமலிருப்பாராயின்அவர்களோடு(வார்த்தை சொல்லும்பொழுது) பெரியோர்கள் "நான்தான்"என்றுமாத்திரஞ் சொல்லவேண்டியது. அவ்வாறே எல்லாஸ்திரீகளுக்குஞ் சொல்லவேண்டியது. (என்றால், தன்குலம் கோத்திரமுதலிய விஷயங்களைக்காட்டி அபிவாதனஞ் செய்தலின்பொருளையுணர அசக்தராயிருப்பவர்களுக்கு மேற்கண்டவிஷயங்களைச் சொல்வதிற்பயனின்றமையால்நானென்றுமாத்திரஞ் சொல்லுகவென்றார்.)

கஉச. தனதுபெயரை அபிவாதனஞ்செய்து அநந்தரம்சம்போதனார்த்தத்தை விளக்கும் "ஹோ"சப்தத்தைப்பிரயோகிக்கவேண்டியது ஏனெனில் இந்த"ஹோ" சப்தமானது சம்பூர்ணமாக அபிவாதனஞ்செய்யப்படுகிற நாமத்தைப்போலவே ஸ்வரூபமுடையதாக இருஷிகளால் எண்ணப்பட்டிருக்கின்றது.

கஉரு. பிராம்ஹணன் அபிவாதனஞ்செய்தபின்பு அவனுக்குப் பிரத்தியபிவாதனஞ்செய்யும் (விப்பிராதிகள்) ஓ உத்தமனே நீவெகுநாள் வாழக்கடவது. என்றுசொல்லவும், மேலும் பிரத்தியபிவாதனஞ்செய்யும் நாமாந்தத்திலிருக்கும் உயிரெழுத்தையும் முந்திய மெய்யெழுத்தையும், உச்சஸ்வரத்தைக்கொண்டு மூன்றுமாத்திரைப்பொழுது நீடித்துச்சொல்லவும்.

கஉசு. எந்தவிப்பிரன்அபிவாதனத்துக்கு தகுதியானபிரத்தியபிவாதனஞ்செய்ய அறியானோ அவன் அறிவுள்ளவனால பிவாதனஞ் செய்யப்படத் தக்கவனல்லன். அவன் சூத்திரன்எப்படி அப்படியே. (என்றால் வந்தனத்துக்குப் பிரதிவந்தனஞ்செய்ய அறியாதவன் வந்தனத்துக்கு அர்ஹனல்லன்.)

கஉஎ. அறிவுள்ளவன்,பிராம்மணனை சந்தித்தால் குசலமா? (என்றால் யோகாதிகள்விருத்தியடைகின்றனவா)என்றும், க்ஷத்திரியனைச் சந்தித்தால அநாமயமா? (என்றால் துன்பமில்லா திருக்கின்றாயா)வென்றும, வைசியனைக்கண்டால் க்ஷேமமா? (என்றால் நஷ்டமடையாதிருக்கின்றாயா) வென்றும், சூத்திரனைக்காண்கில் ஆரோக்கியமா? (என்றால் ரோகமில்லாதிருக்கின்றாயா) வென்றும் க்ஷேமம் விசாரிக்கவேண்டியது.

கஉஅ. யாதாமொரு திட்சைசெய்துமுடித்திருக்கும் யாதொருவன், சிறியவனாயிருந்தபோதிலும் அவனை அவன்பேரிட்டழைத்து வார்த்தைசொல்லலாகாது மற்றுதருமமறிந்தவன் அவனை "ஹோ" என்னும்சம்போதனப்பிரத்தியத்தினாலாவது அல்லது, "பவத"(தாங்கள்)என்னும் மரியாதை வாசகத்தினாலாவது அழைக்கவேண்டும்.

கஉகூ. மற்றொருவனுடைய மனைவியையும், தனக்கு ரத்தசம்பந்தமில்லாதமற்றஸ்திரீகளையும் "பவதீ"(தாங்கள்)என்றும்,நல்லகுணமுடையவளேசோதரியே என்றும் அழைக்கவேண்டியது.

கரு0. சிறியதகப்பன்மார்கள், அம்மான்மார்கள், மாமன், ருத்விக்கர் (எக்கிய முதலியவற்றைச் செய்விப்போர்) ஆசாரியர்கள், இவர்கள் தன்னைப் பார்க்கிலும் சிறியோராயினும், அவர்களைக்கண்டெழுந்து "நான்பலானவன்" என்று சொல்ல வேண்டியது

கருக. தாயோடுபிறந்தவள், அம்மான்பெண்சாதி, மாமியார், அத்தை (தகப்பனேடுபிறந்தவள்) இவர்கள் குருபத்னியைப்போல்அபிவாதனஞ் செய்யப்படவேண்டும். ஏனெனில் இவர்கள்குருபத்னிக்குச் சமானமாயிருக்கிருர்கள்,

கருஉ. தமயன்பெண்சாதிஸஜாதியாயிருந்தால், பிரதிதினமும் அபிவாதனஞ் செய்யப்படவேண்டும். ஆனல் சிறியதகப்பன்மார்கள் ஸ்திரீகளும் தாய்சம்பந்தமான பெண்களும், தேசாந்திரம் போய் வந்தகாலத்தில் மாத்திரமே அபிவாதனஞ் செய்யத்தகுந்த வர்கள்.

நிருபங்கள்.

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ.

எத்திறக்கலைகளும் யாவருமுணர்தர முத்தமிழ் நடைதழீஇ மொழிபெயர்த்துதவுவான்உத்தியோகத்தை யுசிதமாநடாத்தும் தத்துவபோதினிப் பத்திரிகாதிபரே,

ஐயா?

இதனடியில் யான்வரையுஞ் சிலசெய்தியைப்பெரிதெனல் தகுதியன்றெனல் முதலியகாரணங்களைக் கூறித்திச்கரிக்காமல் தங்கள் பத்திரிகையிஞேர்புடை ஒருமுறையிலேயே முழுமையும் மாகடனஞ்செய்யும்படி அன்புகூர்தல் வேண்டுமென மிகுதியும் பிரார்த்திக்கிறேன்.

தங்கள்பத்திரிகை தத்துவபோதியென்னும் அபிதானத்தோடு முதலில்புறப்பட்டபோது இனிமேல், இதனல் சாஸ்திரவிரோதமாயும் சிஷ்டார்கர்ஹிதமாயும் அபகீர்த்திகரமாயும் இருக்கும் துர்நடத்தைகள் நீங்குமென்றும் நன்னடத்தைகள் அபிவிர்த்தி யாகுமென்றும் எண்ணியிருந்தேனே.

அன்றியும் இகலோகசௌக்கியங்களைத் தருவனவாகிய பிரகிருதிசாஸ்திரம், பதார்த்தவிஞ்ஞானசாஸ்திரம், ராஜ்ஜியதந்திரசாஸ்திரம், அர்த்தசாஸ்திரம், சரித்திரங்கள், வியாசங்கள் மற்றும் இவைபோல் வனபிறவும் இப்பத்திரிகைமூலமாய் வெளியிடப் படுவதையும் இதுபோலவே பரலோக சௌக்கியங்களைத் தருவனவாகிய வேதம் உபநிஷத்துக்கள் மநுஸ்மிருதி, பகவத்கிதை முதலியவைகளுக்குப்பிராசீந சங்கரராமாநுஜஅநந்ததீர்த்தர்களால் ஸ்தாபித்தபாஷியங்களையும்நவீன நீலகண்டபாஷியமுதலிய குமதபாஷியங்களையும் அநுசரியாமலும், நூதனமா யொரு தாற்பரியத்தையு மெழுதாமலும், யாவருமெளிதிலுணரும்படித் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதையும் வடமொழியில் எல்லோருக்கும் எளிதில் ஞானமுண்டாகப் பாலவியாகரணம், அகராதி, வசன காவியங்கள்முதலியவற்றைநிச்சயித்திருந்த மையையுங்கண்டு அதிகமுங்களிப்பு முற்றிருந்தேனே.

மேலும் மழையில்லாமல் விளைவுகுன்றிப் பதார்த்தங்கள் யாவும் பிரியமாய் யாவருக்குஞ் சௌக்கியத்தாழ்ச்சி நேரிட்டிருக்குந் தசையில் தற்காலத்தரசு புரிவோரால் ஏற்படுத்தப்பட்ட வரியிறைகளுக்குப் பயந்து ஜனங்கள் நடுங்கியிருக்கு நடுக்கத்தை ஒருவாருவது பரிகரிக்கும்பொருட்டு நீங்கள் இங்கிலீஷில் மிகப்பயிற்சி செய்திருப்பதற்கும் பயனுகக்குடிகளின் விஷயத்தில்பரிந்தெழுதவேண்டிய அம்சங்களை நியாயத்தோடும்எடுத்துக்காட்டோடும் உபந்நியசித்துவென்றிபெறும்படி அதிகத்திறமாயெழுதி ராஜாங்கத்துக்குக் குடிகளின்மேல் இரக்கமுண்டாகும்படி செய்து லோகத்தாருக்கு உபகரிப்பீர்களென்றும் மனேரதித்துக் கொண்டிருந்தேனே.

இவ்வாறிருந்தது யான்மாத்திரமோ மற்றுஞ்சில புத்திமான்களுந்தான். இப்படியிருக்கையில் ஆதியில் பிறர்மனம் நோவும்படியானகாரியங்களில் பிரவேசிக்கிறதில்லையென்று செய்தகொண்ட பிரதிக்ஞையையுங் கடந்து வாசிப்போர் வாய்கசக்கும்படியாகவும் இவ்விருதிறத்தாருக்கும் மனம்வருந்தும்படியாகவும் சாஸ்திரவிருத்தமாயும், சிஷ்டார்கர்ஹிதமாயும், அபகீர்திகரமாயும்,இகபர நன்மைகளுக்குக்கேடாயும்; உங்களுடைய பொதுவானகொள்கைக்கே முற்றும்பழுதாயும், பற்பல நூல்களையுங்கற்று உண்மைப் பொருளை உணர்ந்துகொள்ளாமற்றுனே இயற்கையினலோ அல்லது கூட்டுறவாலுண்டாகிய செயற்கையினலோ கௌரவிக்கத் தகாதவைகளைக் கௌரவித்தும், நிந்திக்கத் தகாதவைகளை நாவெழுந்து நிந்தித்தும் வர

த்தொடங்கியது சரியல்லவேயென்று புத்திமான்கள் பலர் சொல்வதையுங் கேட்டியான் சகியாதவனாய் எழுதத்துணிவுற்றனன்.

பிரதமத்தில் ௧௮௯௪௵ மே௴ ௭௳ அச்சிட்டபத்திரிகையில் ஸ்ரீபகவத்ராமாநுஜாசாரியர் திருக்கோட்டியூரில் எல்லோருக்கும் திருமந்திரார்த்தத்தை அருளிச் செய்தது லோகப்பிரசித்தமாயிருக்க அதையும், எளிதிலெல்லோருமுணர்ந்துகொள்ளும்படி சுலபமான நடையில் தமிழ்வசனரூபமாயிருக்கிற குருபரம்பராப்பிரபாவமுதலிய கிரந்தங்களையும், ஓர்ந்துணர்ந்தெழுதாமல் அவைகளுக்கு விருத்தமாகத்துவயத்தை வெளியிட்டாரென்று எழுதி நீங்கள் வெளியிட்டதே உங்களுக்கு இந்தவிஷயங்களில் சிறிதும் பரிசயமில்லையென்பதற்குப் போதுமான சாட்சியாகாமற் போகாது, இதுவேஇவ்வளவிலிருந்தால் சாஸ்திரவாசனையில்லாத நீங்கள் சொந்தமாயெழுதும் மற்றசங்கதிகள் நினையாமலிரார்களென்று நீங்களும் உணரவேண்டியது ஆவசியகந்தானே அப்படிஎழுதும் சங்கதிகளால் உலகத்துக்கு என்னபயனைத் தருமோ தெரிந்திலேன், ஆதலால் பணிவேறின்றிச் சகலசாஸ்திரங்களையுங்கற்று மெய்ப்பொருளாராய்ந்து கருத்தில் மாச்சரியமும் விட்டாலல்லது தெரியவராத விஷயத்தில பரிசயமும் மாச்சரியமின்மையு மில்லாத நீங்கள் சிருஷ்டியினாதியி லுண்டானவர்களாயும், மாச்சரியமற்று சாஸ்திரங்களைக்கற்று மெய்ப்பொருள்களைஐயந்திரிபறவாராய்ந்து அவற்றைச் சுவயோகமகிமையினாலே சாக்ஷாத்கரித்தவர்களுமாகிய மஹரிஷிகள்முதலிய பூர்வீகர்கள் சாத்வீகஸ்மிருதேதிகாஸ புராணாதிகளில் அருளிச்செய்தும் அநுஷ்டித்தும் வந்தவைகளை நீங்கள் சரியன்றென்றுசொல்வதையும், அதைஉங்களையொத்த சிலர்நம்புவதும், கலிப்பிரபாவமேயன்றி வேறன்று.

விக்கிரஹாராதனம்

௧௮௯௫௵ ஜூலை௴ ௭௳ வெளிப்படுத்திய தத்துவபோதினியில் வரதவேங்கடசம்வாதமென்று ஒருகிரந்தத்துக்கு மொவ்வாத ஒன்றைக்கல்பித்து எழுதி அதன்வழியாய் அர்ச்சாவதாரத்தை நிந்தித்திருக்கிறதுமல்லாமல் அக்டோபர்௴ ௭௳ - எழுதிய பத்திரிகையிலும் அவ்வாறு தூஷித்திருக்கிறது, அர்ச்சாவதாரத்திருப் பிரதிஷ்டைக்குப் பிரமாணம், சகலவைதிகர்களும் ஒப்புக்கொண்ட ராமதாபநியோப நிஷத்து முதலிய உபநிஷத்துகளில், ஸவிசேஷத்வ ஸ்தே ஸஸ்ரேஷ்டாஸேஷ்டிவிஜயே, ஸ்ஸம்ஸநிஷ்தஸ்ய, வாஷாண வ்யதிரேகிஷேஷ, ஸேதெஸ்துயொவெயேஜ்ஸ்ரா, ஸேதேணாநெநஸோஸிவ, ஜீஹ்வஹாஸ்தா ஜிவாவெஹ்யா, ஸேஸ்யிஷ்யாஸிஸா ஸேஷவ, என்றிருக்கின்றன.

இவற்றையெல்லாம்நீங்கள்ஓர்ந்துணராமல் நிந்தனைசெய்யத்துணிந்தீர்கள், இதையான்என்னென்றுசொல்லுவேன் இவ்வுபநிஷத்துகளை, யாங்கள் ஒத்துக் கொள்ளோமென்றுநிரங்குசர்களாய்த் திக்கரிக்கிறபக்ஷத்தில் மேலும் நியாயம்சொல்லுகிறேன், அதாவது இங்குநடையாடுகிற வேதத்தில் எக்யோபவீதாதி நிர்மாணமந்திரக்கிரமங்களும்தாரணமந்திரமும் சொல்லப்படாமலிருப்பினும்வேதங்களநந்தமாகையாலும் யோகமகிமையினால் எல்லாவற்றையுஞ்சாக்ஷாத்கரித்திருந்தஹாரீதர் தம்முடையஸ்மிருதியில்விதிசொல்லுகையாலும்அநுமானத்தால்அநுமேயமொன்றுண்டென்றறிய வேண்டு மாகையாலும் அநாதியான சிஷ்டாசாரத்தாலும், தற்காலத்திலும் யெக்யோபவீதாதிகளை த்தரித்துக்கொண்டுவருகிறார்கள், அதுபோலஅர்ச்சாவதாரத்திருப்பிரதிஷ்டைக்குஇங்குஇப்பொழுதுநடையாடுகிறசாகைகளில் உம்முடைய அபிப்பிராயாநுசாரமாய்ச் சாப்தமாய் பிரமாணம்இல்லாமற்போனபோதிலும் வேதங்களநந்தமாகையாலும் இங்குதொன்றுதொட்டு நடையாடிக்கொண்டிருந்தசாகைகளில் அத்தியயனம்பண்ணுஞ் சக்தியுடையோரில்லாமையால் அநேகங்கிலமாய்ப் போனபடியாலும் ஸ்ரீபாஞ்சராத்திரத்தில் பகவானருளிச்செய்திருக்கின்ற படியாலும் ஸ்வயோகமகிமையினாலே யாவும் நன்குணர்ந்த விகநஸர்வைகாநஸத்திலும் மநுயாக்யவல்கியவசிஷ்ட பராசரவியாஸசுகசௌநகாதிகள் தாங்கள்செய்த ஸ்மிருதேதிகாஸ புராணாதிகளிலும் சிற்பசாஸ்திரங்களிலும் அருளிச்செய்திருக்கின்றபடியாலும் அவை பிரமாணமாகாமற்போகா. மேலும் ஆரோக்கியகரமான ஔஷதத்தைச்சேவைபண்ண மனமில்லாத ரோகிகளுக்கு அதனை அபிமதவஸ்துக்களிலே கலந்து கொடுப்பாரைப் போல அஷ்டாங்க யோகக் கிரமத்தாலே பகவானை உபாசித்து உஜ்ஜீவிக்கத்தக்க யோக்கியதையில்லாத மந்தமதிகளாயும், சப்தாதிவிஷயப்பிரவணர்களாயுமிருக்கிற சம்சாரிகளுக்கு அபிமதமான வாத்திய முதலிய சப்

தாதிவிஷயங்களுடன் வேதாந்தங்களில் உ
பாசிக்கும்படி விதித்திருக்கின்ற சமஸ்தகல்
யாணகுண நிலயமாய் எல்லாம்வல்லபரமா
த்மஸ்வரூபத்தைப் பிரகாசிப்பிக்கின்ற திவ்
வியமங்கள விக்கிரஹத்தை அறிந்து தியா
னிக்கும்படி, பிரமன் முதலிய தேவர்களும்
வசிஷ்டாதிமஹரிஷிகளும் தாங்கள் தவம்பு
ரிந்த இடங்களில் தங்களுக்குப் பிரசன்ன
மானபடி திருப்பிரதிஷ்டைசெய்து ஆராத
னக்கிரமங்களையு மேற்படுத்தி யிருக்கிறார்க
ள். அதனைத்தர்மஸ்தாபனார்த்தமாகத் திரு
வவதரித்த பகவானும் சிஷ்டஜனங்களும் பி
ன்சென்றார்களன்றோ. நீங்கள் இவற்றையெ
ல்லாம் நன்குணராமைக்குக் காரணம் யா
தோ அறிந்திலேன். யாவரும்பயந்து அநு
ஷ்டிக்கைக்காகப்பகவதாஜ்ஞையென்றுபெ
யரிட்டு வேதங்களை ரிஷிகளே யருளிச்செய்
தார்களென்கிற உங்களுடைய நூதனக்கொ
ள்கையின்படி, ஸ்மிருதேதிகாச புராணங்க
ளையும்அருளிச்செய்தவர்கள் அந்தரிஷிகளே
யல்லரோ அவர்கள் அருளிச்செய்தவைகளு
க்குள் வேதங்களைமாத்திரம் ஆதரித்துமற்ற
வற்றை அநாதரிப்பது ஸ்வசன விருத்தமன்
றோ. அதையும் யோசிக்காமல் தூஷிக்கை
அயுக்தமென்பது பொதுநோக்காகநீங்களே
சற்று யோசித்துப்பார்த்தால், உங்களுக்கு
ம் விசிதமாகும்.

வருணங்களின்அவாந்தரபேதம்.

பிரமாவினிடத்திலிருந்து முண்டான சக
லஜாதிகளும்ஒன்றாயக்கூடியிருந்துபோஜன
ப்பிரதிபோஜனம் கொள்வனகொடுப்பனமு
தலியவற்றைச்செய்ய ஒப்புக்கொள்ளாமல்
பிரஹ்மக்ஷத்திரிய வைசிய சூத்திரர்களாகி
ய நான்கு வருணங்களிலும் ஒவ்வொருவரு
ணத்திலுள்ள அவாந்தர பேதங்களைஅவரவ
ர்கள்ப் பாராட்டாமல் ஒன்றாய்க்கூடி யிரு
ந்து போஜன பிரதிபோஜனங்களும் கொள்
வன கொடுப்பனவுஞ் செய்வது யுக்தமாயி
ருக்கிறதென்று உங்களுடைய கர்மபரிபாக
த்தால் நீங்கள் கிரகிப்பதுபோல் நான்கு வ
ருணத்தாருள்ளும் ஸ்மிருதியாதிகளில் பிர
சித்தமாய்த்தொன்று தொட்டுவந்த அவாந்
தர பேதங்களை இப்பொழுது விட்டுவிடுகை
யுக்தமென்றுஎங்கள்கர்மபரிபாகத்தால் எங்
களுக்குத் தோன்றவில்லையே.

கர்மவிஷயம்.

பகவதாஜ்ஞா ரூபங்களாயிருக்கிற சுருதி
ஸ்மிருதி சோதிதங்களாகிய கர்மங்க்ள் பல
ஸ்வரூப ஹானியாக உங்களுடைய கர்மபரி
பாகத்தால் உங்களுக்குத் தோன்றியது இ
ன்னஸ்வரூபத்துக்கு ஹானியென்று தெரிய
வில்லை. எங்கள் கர்மபரிபாகத்தால் எந்தஅ
திகாரிக்கு எந்த அபிப்பிராயத்தாலே எவ்வ
ளவு அநுஷ்டிக்கும்படி விதித்திருக்கிறதோ
அவ்வளவு அவைகளை அநுஷ்டியாமல் விடு
கை அந்தஅதிகாரிக்குப் பாரதந்திரிய ஸ்வரூ
பஹானியென்று தோன்றுகிறது. இதுசாஸ்
திரங்களிற் சொல்லியிருக்கின்றது, இங்கே
சொல்லப்புகுந்தால் விரியுமாதலால் ஒழிந்
தனன்.

உலகத்தில் மதுரமுதலிய அறுசுவைகளி
லும் தாரதம்மிய முண்டாயிருக்கஅவையெ
ல்லாம்சமமெனில் பொருந்துமோ ! பொரு
ந்தாது, அப்படியிருப்பினும்கர்மாநுகுணமா
க ஒருவருக்கு ருசித்தது மற்றொருவருக்கு
ருசியாமலிருப்பதுபோல் நியாய வைசேஷி
க யோக கபில மீமாம்ஸக வேதாந்த மதங்
களிலும் அவற்றினுட் பிரிவுகளாகியகுதிர்ஷ்
டிமதங்களிலும் உத்கிருஷ்டமான மதமொ
ன்றே யிருக்கினும் கர்மாநு குணமாகவும்
காலாநுகுணமாகவும் ஒருவருக்கு ருசித்த
து மற்றொருவருக்கு ருசியாம லிருக்கின்ற
து. அதைபிரஸ்தாபிப்பதில் விரோதம்விளை
வதன்றி வேறுபயனொன்றும் உண்டாவதில்
லையென்று சிஷ்டர்கள் இவ்விஷயத்தில் பி
ரவேசிப்பதினின்றும் விலகியிருக்கின்றனர்.

உத்கிரேஷ்டவிஷயத்தில் ருசிவிசுவாசங்
கள், அவற்றிற்குப் பிரதிபந்தகமான பாபங்
கள் நசித்துப் பகவத்கடாக்ஷ முண்டானு
லொழிய உண்டாவ தரிது.

சிருஷ்டியிலுண்டாகி ஸ்வயோக மகிமை
யினால் சர்வத்தையும் சாக்ஷாத்கரித்த மனுவ
சிஷ்ட பராசரபாராசரிய சுக சௌனகாதி
மஹாரிஷிகள் பகவதாஜ்ஞாரூபமான வேத
வேதாந்தார்த்தங்களைச் சாத்வீக ஸ்மிருதே
திஹாச புராணங்களாலே விசதீகருத்திருக்
கையால் ஸ்ரீபகவத்ராமானுஜாசாரியர் த
சோபநிஷத்துகளுக்கும் வேறேபாஷியம் ப
ண்ணவில்லை. ஸ்ரீமத்வேதமூர்த்திகள் சங்க
ராசாரியரோ பகவந்நியமனப்படி கலியுகத்
தில் மோஹநார்த்தம் மேற்கூறிய சாத்வீக
ஸ்மிருதியாதிகளுக்கும் வேதவேதாந்தங்க
ளின் பூர்வோத்தரங்களுக்கும் பிரத்தியக்ஷ
ப் பிரமாணத்துக்கும் விருத்தமாக இரண்
டொருவாக்கியங்களை மாத்திர மெடுத்துக்
கொண்டு அவற்றின் உண்மைக்கருத்தைவிட்
டு மேலெழுந்தவாரியாய் ஒருவிதமானபொ
ருளைக் கற்பித்து அதற்கு அனுகுணமாக மற்
றும் பலவாக்கியங்களுக்கு அபார்தங்களைக்
கூறி, வேறொருமதத்தைக் கற்பிக்க வந்தவ

ராகையாலே தசோபநிஷத்துகளுக்கும் தம்முடைய மதாநுசாரமாய் வேறு வியாக்கியானம் பண்ணினார்.

பகவதாக்ஞியருபமான அந்த வேதவேதாந்தார்த்தங்களை உண்மையாக விளக்குவிக்கும்பொருட்டுப் பகவானே ஸ்ரீவேதவியாசருபியாயிருந்து பிரம்ம சூத்திரங்களை யருளிச்செய்தார். அதற்கு அவர் சிஷியப்பிரதிசிஷியர்களாகிய போதாயனர் திரமிடர் டங்கர்குஹதேவர் பிரமநந்திகள் முதலானவர்கள் யதாசுருதமாய் முதலில் விருத்திவியாக்கியைபாஷியங்களைபண்ணியருளினர்கள் இங்ஙனமிருக்க, மேற்கூறிய பிரமசூத்திரங்களுக்கும் ஸ்ரீபகவத்கீதைக்கும் ஸ்ரீமத்வேதமூர்த்திகள் சங்கராசாரியர், ஸ்ரீவேதவியாச பகவானருளிச் செயல்களாகிய ஸ்ரீபாரத பாகவதங்களுக்கும்அவர்சிஷியர்களானபோதாயனாதியோர் செய்திருக்கும் விருத்தி வியாக்கியை பாஷியங்களுக்கும் விரோதமாக அவர்களுக்கு நெடுங்காலத்துக்குப் பின் பாஷியஞ்செய்தனனென்பது. மெய்யே. இப்படி இவர்செய்தனவெல்லாம் பகவந்நியமனத்தால் கலியுகத்தில் மோகனார்த்தமாயிருப்பினும் உஜ்ஜீவனார்த்தம் திருத்துவிக்கவேண்டிப் பகவானானவர் திருவுளங் கொண்டு திருவநந்தாழ்வானை அவதரிப்பித்தனர், அவ்வாறு அவதரித்த ஸ்ரீமத்வேதமார்க்க பிரதிஷ்டாபனாசாரியராகிய ஸ்ரீமத் ராமானுஜாசாரியர் தசோபநிஷத்துகளுக்கும் சங்கராசாரியர் விரோதமாகச் செய்த அம்சங்களை ஆங்காங்குப்பகவானுடைய திருவுளத்துக்கநுகூலமாகத் திருத்தி வேதார்த்த சங்கிரஹமென்கிற கிரந்தத்தில் அநாதியாய் வழங்கிவந்த அர்த்தங்களை வெளியிட் டருளினர். அன்றியும் பிரமசூத்திரங்களுக்கும் ஸ்ரீபகவத்கீதைக்கும் ஸ்ரீமத்வேதமூர்த்திகள்சங்கராசாரியர் விருத்தமாகசொன்ன அர்த்தங்களையும் அவ்வாறேதிருத்தி ஸ்ரீபாஷியம்கீதாபாஷியங்களாலே அநாதியாய் வழங்கிவந்தஅர்த்தங்களை விளக்கியருளினர். இத்தனையல்லது வேறில்லையே. இவ்வாறுநடந்திருப்பதை நூல்களின் முகத்தாலே நீங்கள் அறிந்திருப்பீர்களானால் சகலகலிகல்மஷாந்தகார விச்சேதகராகிய ஸ்ரீஉடையவருக்கு ஸ்ரீமத்வேதமார்க்கப் பிரதிஷ்டாபனாசாரியரென்னும் விசேஷணத்துடன் ஸ்ரீபகவத்ராமானுஜாசாரியரென்று எழுதுவீர்கள் நீங்கள்அறியீர்களாகையால் உங்கள்மேல் குற்றஞ்சொல்லஎனக்கு நாவெழவில்லை. இவ்விருவருடையசெய்திகளைப் பாத்மோத்ர பார்க்கவோத்ரபுராணாதிகளில் பார்க்கக்காணலாம். ஸ்ரீமத்வேதமார்க்கப் பிரதிஷ்டாபனாசாரியருடையசிஷியப்பிரதிசிஷியர்களான ஸ்ரீபராசரபட்டர், கூரநாராயணஜீயர், ரங்கராமானுஜஜீயர்முதலானோர்கள் சகஸ்திரநாமத்துக்கும் சகலோபநிஷத்துக்கும்பாஷியங்களை பண்ணியருளினர். இதையானெடுத்துச்சொல்லவும் வேண்டுமோ. இது லோகப்பிரசித்தமே.

உலகத்தில் யோக்கியர்களும் பாக்கியவான்களும் சிலரேயன்றி பலரில்லை. சிறந்த பொருள்களும் அவ்வாறுதான். அதுபோலவே பாபரகிதர்களாயும் பகவத்கடாக்ஷ சம்பன்னர்களாயும் இருக்கிற சிலபேர்கள்தாம் ஸ்ரீமத்ராமானுஜாசாரியர் அருளிச்செய்திருக்கும் வண்ணம் சிறிதும்வழுவுதலின்றி அநுஷ்டிப் பார்களேயல்லாமல் ஏனையோர்பலரும் அநுஷ்டிப்பார்களோ!

சங்கரபாஷியமானது இப்பரதகண்ட முழுமையும் பரவியிருப்பதுமன்றியும் இங்கிலாண்டு முதலிய அந்நியநாடுகளிலும் வியாபித்து அரசாண்டுகொண்டிருக்கிறதாய் நீங்கள் சொல்வது கேவலம் பக்ஷபாதமே. அப்படியிருப்பது மெய்யானால் இப்பரதகண்டத்துக்குள்ளே ஸோஹமென்கிற அபிப் பிராயமும் ஸர்வம்மித்தை யென்கிற அபிப்பிராயமும் சிலர்க்குள் மாத்திர முண்டாயிருக்கின்றனவேயன்றிப் பலர்க்குள் உண்டாயிருப்பனவாகக் காணப்படவேயில்லை. அந்தச்சிலர்க்கும் அபிப்பிராயமொன்றும் அநுஷ்டானமொன்றுமாயிருக்கின்றனவே. இத்தேசத்திலுள்ள பலசாதியாருள்ளும் உண்மையாய் விசாரிக்குமளவில் ஆண்டவனொருவனுளன் அவனுக்கு நாம் அடிமை அவன்திருவடிகளி லன்புவைக்கவேண்டும் என்கிறமெய்ம்மைஞான முண்டாயிருக்கிற தேயொழிய வேறில்லையே. இங்கிலாண்டுமுதலிய அந்நிய தேசங்களிலுள்ளவர்களுக்கும் ஆண்டவனொருவனுளன் அவனாலேநாம் படைக்கப்பட்டும் காக்கப்பட்டும் அவனுக் கேநாம் அடிமையென்கிற யதார்த்தகியானமே உண்டாயிருக்கிறது. இது ஸ்ரீஉடையவர் செய்த ஸ்ரீபாஷியத்தின் பொருளுக்குஇசைந்திருக்கிறபடியாலும் உங்களுடைய கீர்த்தனாதிகளும் அவ்வாறே யிருக்குறபடியாலும் அரசன்தான் இருக்குமிடத்திலிருந்து கொண்டுநிலமுழுதும் தன்ஆக்கினைக்குள்ளடங்கி நடக்கச்செய்வதுபோல் இவர்பாஷியமேசகலநாடுகளிலும் வியாபித்து அரசாண்டு கொண்டிருக்கிறது. இதுசத்தியமாகையால் ஸ்ரீமத்வேதமார்க்கப் பிரதிஷ்டாபனாசாரிய ரென்கிற விசேஷணம் ஸ்ரீபகவத் ராமானுஜா

சாரியருக்குநீங்கள் எழுதாமல்விட்டது பிச
கேயன்றிவேறன்று. ஸ்ரீமத்வேதமூர்த்திகள்
சங்கராசாரியார் செய்த பாஷியபுத்தகம் ச
கலதேசங்களிலும் பரவியிருக்கிறதென்றுஒ
ப்புக் கொண்டு அதனால் அதற்குக் கௌரவ
ஞ் சொல்லுகிறபக்ஷத்தில் பைபில் என்னும்
புத்தகம் நூறுபாஷைகளுக்கு மேற்பட்ட
பாஷைகளில் மொழிபெயர்க்கப் பட்டுசூரி
யகிரணம் படும் தேசங்களிலெல்லாம் வியா
பித்து சாம்பிராச்சியம் செய்கிற தென்பது
பிரசித்தமல்லவா ? அதைப்பற்றி நீங்கள் உ
ங்கள் புத்திநுட்பத்தாலாராய்ந்து எழுதப்
புகுந்தால் எவ்வளவு கௌரவித்து எழுது
வீர்களோ அறியேன்.

மதமென்பது பகவானுடைய அபிமதமே
யன்றி வேறுமுண்டோ ! அந்தஅபிமதத்தை
ப் பகவான் தம்முடைய ஆக்கியாரூபமான
சுருதிஸ்மிருதேதிகாசபுராணாதிகளாலே வெ
ளியிட்டிருக்கிறார். அவைபிரதிபாதிப் பன
வற்றுள் அதிகாராநுகுணமாகத்தார்மக்கியர்
களான சிஷ்டர்கள் ஆராய்ந்தறிந்து எவற்
றைஅநுஷ்டித்தார்களோ, அவையே பிரமா
ணமாகும். அச்சுருதி முதலானவற்றின்
பொருள்களை உள்ளபடி யுணர்ந்து அநுஷ்
டித்தாலொழியஉஜ்ஜீவனங்கிடையாது. வே
தவேதாந்தங்களின் உண்மைப்பொருள்களை
ப்பூர்வோத்தரமீமாம்ஸைகளைக் கொண்டே
அறியவேண்டும் ஸ்வதந்தரித்து வியாக்கியா
னம் பண்ணினால் விபரீதத்தில் பரிய வ
சிக்கும்.

பூர்வோத்தரமிமாம்சைகள் பிரமாணமெ
ன்னும் புத்தியும் அவற்றில் அற்பமேனும் ப
ரிசயமுமில்லாதவர்களுக்கு வேதவேதாந்த
ங்களின் உண்மைப்பொருள்கள் எவ்விதமா
ய்த் தெரியவரும். அவ்வாறுதெரிந்துகொ
ள்ளாதவர்கள் எழுதும் விஷயத்தால் லோ
கத்தாருக்கு என்ன உஜ்ஜீவன முண்டாகப்
போகிறது. பகவான் யாவர்களுக்கும் அ
வரவர்களுடைய கர்மாநுகுண மாகத்தநுக
ரண புவனபோகங்களை விவிதமாயளிக்கின்
றனரேயல்லது, ஏகரீதியாயளிக்கக் கண்டி
லோம். அதனாலேஅவர்களுடைய அபராதங்
களின்உண்மைஇன்மையும், பெருக்கத்தாலு
ம்சுருக்கத்தாலும்விளங்குகின்றன. இதுபோ
லவே மறுமைப்பயனும் அவர்களுக்குத்தக்
கபடியளிப்பாரென்பது பேசவும் வேண்டு
மோ?

அவரே பிரமன் அவரேசிவன், அவரேஇ
ந்திரன் என்று சுருதி சொல்வதற்கு மீமாம்
சையின்படி ஆசிரயித்தவர்களைப் பெருமை
யுடையோரா யாக்கவல்ல அருளின் பெரு
மையையுடையவன்மங்களஸ்வரூபன்பரமை
சுவரியத்தையுடையவன்என்றுதனித்தனியே
பொருள் கூறவேண்டும். இம்மூன்றுசப்தங்
களும் சாக்ஷாத் வாசகமாகும்போது அத்வ
ராகமாகவுமந்தரியாமிப் பிராம்மணாதிகளில்.
பகவானுக்குச்சகலசேதனாசேதனங்களும் ச
ரீரமென்பதாகவும், அச்சேதனகோடியில்சே
ர்ந்ததேவர்களும்சரீரமென்பதாகவும், அவன்
சரீரீயென்பதாகவும்சொல்லியிருக்கின்றமை
யால் சரீரவாசக பதங்களெல்லாம் சரீரி
யையே போதிக்குமென்னும் ஸாமானாதிக
ரண நிர்தேசத்தால் சத்வாரகமாயும் ஸ்ரீப
கவானையே சொல்லுகின்றன. இவ்வாறு உ
ய்த்துணர்ந்து பொருள் கொள்ளாமல் தொ
ன்றியபடி நாம்பொருள் சொல்லத் தொட
ங்கினால் அது இருக்கு, எசுர், சாமவேதங்க
ளிலும் சத்பதப்பிரமாணம், சாந்தோக்கிய
ம், சுபாலோபநிஷத்து முதலியவற்றிலும்உ
ருத்திரன் பிரமனிடத்திலிருந்து பிறந்ததாக
வும், அழுததாகவும், பிரமன்நீஏன் அழுகிறு
யென்று கேட்டதற்கு நான் போக்கப்படா
த பாபத்தை யுடையவனாயிருக்கிறேன் அப்
பாபம் போம்படி நாமகர்ணம்செய்யவேண்
டுமென்று பிரார்த்தித்ததாகவும் பகவானைஉ
பாசித்துத் திருமூர்த்திகளி லொருவராய்ச்
சம்ஹாராதி காரத் தைப் பெற்றதாகவும்,
பிரளயகாலத்தில் பகவானால் சம்ஹரிக்கப்
பட்டு இவரிடத்திலேயே ஒடுங்கி யிருக்கிற
தாகவும் சொல்லியிருப் பதற்கெல்லாம் வி
ரோதமாய் முடிகின்றது. ஆகையால் தோ
ன்யறிபடி எழுதுவது சரியன்று.

முக்தியளிக்கிற முகுந்தனே தமதாஜ்ஞா
ரூபமாய் மொக்ஷசாதனமாகியகியானத்தை
யுட்கொண் டிருக்கிற வேதார்த்தங்களின்
பொருள் விளங்கும்படி ஸ்ரீவேதவியாஸ ரூ
பியாயிருந்து அருளிச்செய்தப் பிரம்மசூத்
திரங்களுக்கு ஸ்ரீமத்வேதமூர்த்திகள் சங்க
ராசாரியார் முதலானோர் கலியுகத்தில் மோ
ஹனார்த்தமாக வேறுவிதப்பொருள் கற்பித்
திருக்கிறதைக் கருதி உண்மைப்பொருளைப்
பிரகாசிப்பிக்கைக்காக ஸ்ரீபகவத் ராமானு
ஜாசாரியரை அவதரிப்பித்து அவற்றின் மெ
ய்மைப்பொருள்களைச் சந்தேகவிபரீயமற்ற
ஸ்ரீபாஷியமுகத்தால் விளங்கச்செய்து உல
கத்தை வாழ்வித்தபடியால் அந்த ஸ்ரீவேத
மார்க்கப் பிரதிஷ்டாபனாசாரியராகிய ஸ்ரீஉ
டையவருடைய சம்பந்த முடையவர்களிட
த்தில் பக்தியில்லாதவர்கள் அவருடையஅபி
மானத்துக் குட்படாதவர்கள் ஆதலால் அ
வருடைய சம்பந்தமுடையவர்களைக் கடா

க்ஷிக்கிற விஷ்ணுவின் கருணைக்கு அவர் சம்பந்தமில்லாதவர்கள். தூரஸ்தர்கள்தான் எந்த அபிப்பிராயத்தாலே மற்றசமயங்கள் பகவானாலே கற்பிக்கப்பட்டனவோ அந்தஅபிப்பிராயபலனை அச்சமயத்தோர்கள் அடைவதற்கு யாதொருகுறைவுமில்லை. ஒரேநாட்டிலும் வம்சத்திலும் சாகையிலும் சூத்திரத்திலும் இருந்தாலென்ன அதிசயம். பிரத்தியக்ஷப் பிரமாணவிருத்தமாயும் அனேக வேதவாக்கியங்களுக்கு விரோதமாயும் இரண்டுவாக்கியங்களுக்கு மேலெழுந்தவாரியால் ஒருவித அர்த்தத்தைப் பண்ணிக்கொண்டு மற்ற அனேகவாக்கியங்களுக்கும் அபார்த்தத்தைப் பண்ணிக் கொண்டு திரிவதுமல்லாமல் வேதமெல்லாம் ஸ்ரீமந்நாராயண பிரதிபாதகமென்று தெரிவிக்கைக்காகவே தோபக்கிரமோப சம்மாரங்களில்அநாதியாய்ஹரீ: ஓமென்று சொல்லப்பட்டுவருகிற பிரகாரமே ஸ்ரீஅகஸ்தியமாமுனிவர்செய்த தமிழ் நெடுங்கணக்கில் ஹரிஓமென்று சொல்லியிருப்பதற்கு மாறாக ஹர: ஓமென்று அச்சிட்டும் வேதவிருத்தங்களாய் அசுரமோஹனார்த்தமாக உருத்திரபகவானாலே கற்பிக்கப்பட்டவராகிய பாசுபததீக்ஷைகள், பாசுபதவிரதங்கள், சுராகும்ப ஸ்தாபனம் லகுடதாரணம், சவபஸ்பஸ்நானம், சவபஸ்பாநுலேபனம், நரகபால பாத்திர போஜனம், நராஸ்திமாலாதாரணம், ஜடாதாரணம் லிங்கதாரணம், ஷட் சக்கரதாரணம், பகஸ்தானத்திலிருக்கும் பசுபதி தியானமுதலிய நடக்கைகளையுடைய மதஸ்தருடனும் ஹத்திபானம், வியபசாரமுதலியவைக்கு முக்கியா தாரமாயிருக்கிற மதஸ்தருடனும் சமஸ்த கலியாண குணங்களையும் சர்வசக்தியையு முடைய ஸ்ரீ பரப்பிரம்மத்திற்கு அவை யொன்றுமில்லையென்றும் பிரத்தியக்ஷமாயிருக்கிற வேதவைதிகப் பிரபஞ்சங்களும், புண்ணியபாபங்களும், சுவர்க்கநரகங்களும், பந்தமோக்ஷங்களும், இல்லையென்றும், சர்வமும் மித்தையென்றும், பேதைகளாயினோர்கள் பெண்டாட்டிக்கும் பெற்றதாய்க்கும் பெதமேயில்லையென்று மயங்கிப் பிரவர்த்திக்கும்படி பேதமேகிடையாது எல்லாம் அபேதமென்றும் சொல்லுகிறமதஸ்தருடனும் விவேகசீலனாகிய ஒருவனுக்குப் போஜனப்பிரதி போஜனாதிகள் செய்ய எவ்வாறுமனந்துணியும் .தாழ்ந்தவன்உயர்ந்தவனோடு போஜனாதிகள் செய்ய ஒத்துக்கொள்ளுவனேயொழிய உயர்ந்த நிலையிலிருப்பவன் தாழ்ந்தநிலையி லிருப்பவனோடு போஜனாதிகள் செய்ய எவ்வண்ணம்விரும்புவான். மேலும் விபரீதமான கொள்கை யுடையவர்களுடன் உண்ணுதல் முதலியன செய்யக்கூடாதென்று யோகப்பிரபாவத்தாலே வேதவேதாந்தரார்த்தங்களைச் சாக்ஷாத்கரித்தரிஷிகள் அருளிச்செய்த சாத்வீக ஸ்மிருதேதிகாசபுராணாதிகள் வியக்தமாகச் சொல்லுகின்றன. இதனையறியாமல் குமார்க்கத்துக்குட்பட்டு சன்மார்கவேதசாஸ்திராதிகளில்இல்லையென்று சாதித்துத் தூஷிப்பது கிரமமன்று

தொன்று தொட்டுவந்த மரியாதைக்கும் ஆசாரத்துச்கும் விரோதமாய் விபரீதக்கொள்கைகளைக் கற்பித்ததுமன்றி இன்னும்நாள்தோறும் கற்பித்தலையும் மேற்கொண்டு பிரத்தியக்ஷவிருத்தமான அபோஹங்களையும் அக்கிரமங்களையும் செய்துகொண்டு பரஸ்பரம் உண்டாயிருந்த அந்நியோந்நியதை க்கெடுத்தவர்களும் இன்னுங் கெடுக்கமுயல்வோரும் இன்னாரென்று பக்ஷபாதமின்றித்தடஸ்தமாகயோசித்தால் உங்களுக்கு விளங்காமற்போகாது

வைஷ்ணவர்களென்ற சிலரிடத்திலும் அபக்ஷியபக்ஷணாதி நிஷித்தகிருத்தியங்க ளிருக்கின்றவே யென்றாலோஅவை யாதவப்பிரகாசர் ஸ்ரீஉடையவர் திருவடிகளில் ஆஸ்ரயித்ததனாலே அக்காலத்திலுள்ள யாதவப்பிரகாசருடைய சிஷியபுத்திரர்கள்சேர்ந்து கற்பித்தவைகளென்று வைஷ்ணவகிரந்தங்கள் உத்கோஷிக்கின்றன. வைஷ்ணவ கிரந்தங்களில் குறிப்பாகவாவது எங்கேனும் இந்ததுராசாரங்களைப் பூர்வீகர்கள் அனுஷ்டித்ததாகக் கண்டதுண்டா?

பிராஹ்மணாதிகளுக்கு கியானோப தேசாதிகள் சாஸ்திரசம்மதமா யிருக்க அர்த்தாத்சித்தமானதேஹயாத்திரையைப் பற்றிஆசாரியபுருஷர்களைத்தூஷித்து, நீசசேவாதிகளால்தேஹயாத்திரையைப் பண்ணிக்கொண்டிருப்பவர்களைச் சிலாகிப்பது கலியின் மகாத்மியமாயிருக்கிறது. சாஸ்திரங்களில் பிராஹ்மணர்கள் சூத்திர விருத்திகளை யனுசரிக்கக்கூடாதென்றும், அவர்களுக்குமிகவும் சங்கடநேரிடின் வைசிய விருத்தியையவலம்பித்து அன்ன வஸ்திரங்களுக்கு வேண்டிய பொருள்களைச்சங்கிரஹித்துக்கொண்டுபின்பு அவ்வியாபாரத்தை விட்டுப் பிரஹ்மத்தியான பரர்களாயிருக்கும்படி விதித்திருக்கின்ற பிரகாரம் அவர்கள் இக்கஷ்டகாலத்தில் வைசியவிருத்தியிற் பிரவேசிக்கலாமென்றால் இன்றிமையாத மூலதிரவிய சகாயமில்லாமல் அது முடியாதாகையால் அதை அவர்களுக்கு உதவிசெய்து பின்னர் அவர்கள்அ

தில்பிரவேசிக்காமலொழிந்தால் அது பற்றியவர்களைத் தூஷித்தால் தர்மமா யிருக்கும், அங்ஙனஞ் செய்யாமலே நிந்திப்பது யுக்தமோ அயுக்தமோ நீங்களே யோசிக்கவேண்டும்.

பிறர்மனம் நோவும்படியான செய்கைகளில் பிரவர்த்திக்கிறதில்லையென்று சொல்லிக்கொண்டே ஒருஜோலிக்கும் வராதவர்களைத் தூஷிப்பதுதான் இப்பத்திரிகாதிபருக்குப் பிரயோஜனமோவென்று சாதுக்கள் சங்கடப்படுகின்றமையால் நீங்கள் இப்படிப்பட்டவிஷயங்களில் இனிதலையிட்டுக்கொள்ளாமல் ஆதியில் உத்தேசித்த பொதுநன்மையான காரியங்களிலேயேபிரவேசிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

சென்னைமாநகரம், நவம்பர்௴-௨௪௳ ௧௮௬௬௵ } இங்ஙனம் தங்கள்விதேயன் மெய்மைகூறுவோன்.

தத்துவபோதனி யெனும் பத்திராதிபருக்கு வந்தனம்.

இந்நிருபத்தைத் தங்கள் மேன்மைபொருந்தியபத்திரிகையிற் பிரசுஞ்செய்ய பிரார்த்திக்கிறேன்.

ஐயா! ஒன்றேதெய்வமென்று சிறுபிள்ளைகள் முதல்பெரியோர்வரையில் நன்றாய் தெரிந்திருந்தும், மூடநம்பிக்கையுள்ள வர்களுடைய ஏற்பாட்டின் பழக்கவாஸனையினால், விக்கிரகரூபமாகவும், படரூபமாகவும், பலவிதப் புருஷப்பிரதிமைகளையும் பெண்பிரதிமைகளையும் தச்சரைக் கொண்டும், சித்திர வேலைக்காரரைக் கொண்டும், செய்விப்பித்து, வீடு, கோயில், மரத்தடி, மந்தைசாலை, சந்து, பொந்து, முதலிய இடத்தில்வைத்துக்கொண்டு, மானிடர்களுக்குரிய சடங்குகள் அவைகளுக்கும் உண்டென்றுகருதிப் பாவனையாக நிஷேகம் முதலியசடங்குகளை சிறுபிள்ளை விளையாட்டைப்போல் அப்பதுமைகளுக்கு குமாஸ்தாவாக தாங்களிருந்து செய்வித்து ஆநந்தத்தையடைந்துஅவைகளையே தெய்வமாகக் கொண்டு அச்சடங்குகளையே தெய்வஸ்தௌத்தியங்களாகச் சொல்லிப்பாடி எப்போதும் பிரார்த்திக் கின்ற, இத்தேசத்து ஸம்ஸ்கிருத திராவிட வித்துவான்களும் தேசாபிமானம் சேர்த்திருத்த விருப்பமுள்ளவர்களும், இவைகடந்த நடுநிலைமையுள்ளவர்களுமாகிய அநேகரிடத்தில் பிரம்மசமாஜ ஏற்பாட்டைச் சொன்னேன். அவர்கள் எல்லோரும்அவ் வேற்பாடெல்லாவற்றையும் சத்தியமாகநன்கென்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் ஒப்புக்கொண்டதை நாலுபேர் முன்பாகச்சொல்ல அஞ்சுகிறார்கள். ஏனெனில் இதைநாம் வெளிப்படையாகச்சொல்வோமானால் நமது மாமன் மைத்துனன் அண்ணன் தம்பிமுதலிய உறவின் முறையோர் நம்மை ஜாதிக்குப் புறம்பாக்கி விடுவார்களல்லவாவென்கிறார்கள். ஒவ்வொரு மனிதருக்கும் இப்படியே மனதில் சம்மதமும் வெளிக்குப்பயமும் இருக்கின்றன. அவ்வவரும் தங்கள்தங்கள் மனதின்படி எல்லாரும் சம்மதிப்பார்களாயின் அதிகசௌக்கியமும் மேன்மையும் உண்டாகுமென்று சொல்லுகிறார்கள். இந்துக்களுக்குள் பொதுவான நன்மையைப்பற்றி எல்லாரும் ஆலொசித்துபெருந்தொகையார் ஒப்புக் கொண்டதையாவரும் அனுஷ்டிக்கவேண்டுமென்ற ஐக்கியஏற்பாடு இன்மையால் மேற்குறித்த சிறந்தோருடைய நல்லெண்ணமும் பயன்படா மலிருக்கின்றது. ஜாதிமுதலான மூடக்கொள்கை கட்டுப்பாட்டில்வெறுப்புறும் மேற்குறித்தமேலோர்கள் பிறருக்கு பயந்தேதமது நல்லெண்ணத்தை வெளிக்குத்தூஷணம் செய்கிறார்கள். தற்காலஸ்திதியானது ஏதொன்றையும் கூடியவரையிலாராய்ந்து எதார்த்தம்அறிய வேண்டுமென்னும் எண்ணத்தை விளைப்பதால், தம்வீட்டில் வந்தவர்களிடத்திலும் தம்மை அண்டினவர்களிடத்திலும், தங்கள்உண்மையைச் சொல்லத்துணிந்திருக்கிறார்கள். சிநேகிதருக்குக் கடிதமூலமாகத்தமதுண்மையைத் தெரிவிக்கத் துணிந்திருக்கிறார்கள்.

ஆகையாலிதைக்கொண்டே அதிசீக்கிரத்தில் தமதுஉண்மையான நிலையை வெளிப்படையாகச்சொல்லி நன்னெறியினின்று ஆநந்தத்தை யனுபவிப்பார்களெனநம்புகிறேன்.

௧௮௬௬௵ பிப்பரவரி௴ } கும்பகோணம் க, துரைசாமியையங்கார்.

தனியான, ஒப்பற்ற, மெய்யறிவநந்த பிரும்மம், சாந்திபூர்ணம், அமிருதம், அதுஉருவுங்குற்றமுமற்றது. இதையறிந்தவர்அமிருதராவார்; மற்றவர்துக்கமேயடைவார்.
மெய்யேவெல்லும், பொய்யல்ல.

சென்னப்பட்டணம்,—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலியாரால் பதிப்பிக்கப்பட்டது.